1970 ஆகஸ்ட் 31]

சரக்கின் தரம் அதைவிட முக்கியம். சரக்குகளின் தரங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிறப்பு அங்காடிகளில் தரமுள்ள சரக்குகள் குறைவான விலைக்குக் கிடைக்கும்.

*157 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the employees of the Super-market (Karpagam) at Vellore have been given a notice of recovery for the shortages in various sections of the Co-operative Society; and

(b) whether opening stocks were allowed to be verified by the employees from whom the recoveries have been ordered?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) சரக்குகளைப் பெற்றுக்கொண்டதற்கு எழுத்துமூலம் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, what is the total number of Supermarkets that are working in our State—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி வேலூர் சூப்பர் மார்க்கெட் பற்றியது.

திரு. கே. விநாயகம்: வேலூர் கற்பகம் சூப்பர் மார்க்கட்டில் என்ன தவறு நடந்து இருக்கிறது? எவ்வளவு கையாடல் செய்து இருக்கிறார்கள்? அப்படிச் செய்தவர்கள் நிர்வாகத்தில் இருப்பவர்களா? என்ன தண்டனை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது? அவர்களிடமிருந்து வசூல் செய்வதோடு அவர்கள் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, பணம் கையாடல் என்பதல்ல. சரக்குகள் இருப்பு குறைவாகக் காணப்பட்டது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கையெழுத்திட்ட அளவுக்குச் சரக்குகள் இல்லையென்றதால் குறைவாக இருப்பதற்காக, பணத்தை வசூல் செய்வதற்கு, நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக, குற்றப் பிரிவிலே, கிரிமினல் வழக்குப் போடுவது என்றால், எந்த அளவுக்குக் குறைவு செய்திருக்கிறார்கள் என்று தெரியவேண்டியிருக்கிறது. ஆகவே முதலில் நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள்

*158 வினா:—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு அதிகப்படியாக E. S. I. மருத்துவ மனைகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

[1970 ஆகஸ்ட் 31

திரு. கே. என். குமாரசாமி : சோமானூரிலே 500 தொழிலாளர்கள் இரண்டு பகுதிகளிலே வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இ. எஸ். ஐ. பிடித்தம் தொழிற்சாலைகளிலே செய்துவிடுகிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்களுக்கு மருத்துவ வசதிகள் இல்லை. எனவே, அந்தப் பகுதியில் ஒரு இ. எஸ். ஐ. மருத்துவ மனை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நான் முன்பே இந்த மன்றத்திலே பல முறை சொல்லியிருக்கிறேன். இப்பொழுது தீவிரமாகப் பல பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று முயற்சி செய்கிறது. மத்திய அரசாங்கம் எடுத்திருக்கிற இரண்டு முடிவுகள் அதற்குத் தடையாக இருக்கின்றன. அதைப்பற்றி மத்திய அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறோம். உண்மையாகச் சொல்லப்போனால் ஒரு சிறு போராட்டமே நடந்துகொண்டிருக்கிறது. முடிவுகள் விரைவாகக் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இப்பொழுது சிங்காநல்லூரில் உள்ள இ. எஸ். ஐ. மருத்துவ மனையை முழுமையாக நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி இந்த மாதம் 31-ம் தேதி முதல் அது செயற்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் மருத்துவர்கள், அவர்கள் வேலை முடித்ததற்குப் பிறகு, தனியாகத் தொழில் பார்க்கக்கூடாது என்ற நியதி இருக்கிறது. அதனால் பலர் வேலை செய்யப் போவதற்கு மனமில்லாத நிலை இருக்கிறது. எனவே, அவர்கள் அந்த வேலையை முடித்ததற்குப் பின்னால் வெளியே தங்களுடைய தொழிலைப் பார்க்கலாம் என்பதற்கு விதியைக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மாநில அரசு இது குறித்து கார்ப்பரேஷனுக்குத் தெரிவித்திருக்கிறது: முழு விவரங்களைக்குறித்து மருத்துவத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்கவேண்டும்.

திரு. சி. வி. அண்ணாமலை : இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் மருத்துவர்கள் கல்லூரியிலிருந்து படித்து முடித்தவுடன் வந்தவர்களாக இருப்பதால் அவர்களுக்குச் சரியான அனுபவம் இல்லை என்று கூறப்படுகிறது. எனவே 10 ஆண்டுகளுக்கு மருத்துவத் துறையிலே அனுபவம் உள்ளவர்களை அந்த மருத்துவ மனைகளுக்கு டாக்டர்களாகப் போடுவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அதற்கென்று இருக்கிற விதிமுறைகளின்படிதான் டாக்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வெளியிலே உள்ள நோயாளிகளைப் பார்த்தால் தொழிலாளர்களுக்கு முழு

1970 ஆகஸ்ட் 31]

நேரமும் செலவழிக்கமுடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். எங்கே அப்படி இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

* 159 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வைத்திய வசதி அளிக்கும் தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்திற்கு அனுமதி தர மத்திய அரசு மறுத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மதுரைப் பகுதியில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கு நீட்டிக்கும் திட்டத்தை ஒத்திப்போடுமாறு 1969 மே திங்களில் மாநில அரசு முதலில் கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும், பிறகு கூடிய தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் நிலைக்குழு ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கும் வரையறுக்கப்பட்ட மருத்துவ உதவி பெறும் வகையில் மேற்படி திட்டத்தை நீடிப்பதற்கு இசைந்தது. இதற்கிடையில் மதுரைப் பகுதியிலுள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு 3–6–1969 முதல் மேற்படி திட்டம் நீடிக்கப்பட்டது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு எங்கு எல்லாம் இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளின் மூலம் தொழிலாளர் குடும்பங்களுக்கு நன்மை தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நாடு முழுவதும் அந்தத் திட்டம் நிறைவேறுகிறது. அயனாவரத்திலே 650 படுக்கைகள் இருக்கின்றன. கோயம்புத்தூரில் உள்ள மருத்துவ மனையில் 300 படுக்கைகள் இருக்கின்றன. மதுரையிலே உள்ள மருத்துவ மனையில் 202 படுக்கைகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் பல்வேறு மருத்துவ மனைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தனியாகக் கேள்வி கேட்டால் விவர அறிக்கையை அளிக்கிறேன்.

Commercial Broadcast in All-India Radio.

* 135. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have given advertisements in the Commercial Broadcasting Service of the All-India Radio; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) காந்தி நூற்றாண்டு விழா என்பதாலும், கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருள்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும் 3—11—1969-லிருந்து 21—11—1970 வரை, வானொலி